**செய்தி வெளியீடு எண்: 092** **நாள்: 06.02.2018**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.கே.சி.கருப்பணன் அவர்கள் தலைமையில் தொழிற்சாலைகளின் நிர்வாகிகள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளுடனான கலந்தாய்வு கூட்டம் 05.02.2018 அன்று அம்பத்தூர் தொழிற்பேட்டையில் அமைந்துள்ள **AIEMA** வளாகத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.கே.சி.கருப்பணன் அவர்கள் இக்கூட்டத்தில் பேசியதாவது,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் பல்வேறு வகையான திட்டங்களை மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பில் தொழிற்சாலைகளுக்கும் புதிய தொழில் தொடங்கும் முதலீட்டாளர்களுக்கும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொழிற்பேட்டைகளும், சிறு குறு தொழில் முனைவோர்களுக்கும் ஊக்கம் அளித்து தொழில் துறையை வளப்படுத்திடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது. அதன்படி தொழிற்சாலைகள் அமைத்து தொழில் தொடங்குபவர்கள், இணையதளம் வாயிலாக மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் உரிமம் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் பொழுது அவர்களது விண்ணப்பங்கள் அனைத்து வகையான இணைப்பு சான்றிதழ்களும் இருக்கும் பட்சத்தில் **30** நாட்களுக்குள் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டு விரைந்து நடவடிக்கை எடுத்து தொழில் தொடங்குபவர்களுக்கு உரிமத்தினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் தொழிற்பேட்டை வளாகங்களில் மழைநீர் கால்வாய் மற்றும் சாலை வசதிகளை மேம்பாடு செய்ய சிட்கோ நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் நடைபெறும் இந்த அரசு தொழில் தொடங்குபவர்கள் யாராக இருப்பினும் அவர்களின் குறைகள் நிவர்த்தி செய்யும் வகையில் எந்த துறையாக இருந்தாலும் அதை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் அம்பத்தூர் பகுதி தொழில்முனைவோர் சார்பாக **AIEMA** தலைவர் திரு.டி.ரவி மற்றும் தொழிற்சாலைகளின் நிர்வாகிகள் சார்பில் அம்பத்தூர் தொழிற்பேட்டை வளாகத்தில் எலேக்ரோபிளேட்டிங் தொழிற்சாலைக்காக அமைக்கப்படவுள்ள பொது சுத்திகரிப்பு நிலையத்திற்கு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பில் வழங்கிய இசைவாணைக்காக மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.கே.சி.கருப்பணன் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.அலெக்ஸாண்டர், இணை தலைமை பொறியாளர் திரு.கு.குமார், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.ம.வாசுதேவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**